DECEMBER 2023 **P/ID 35320/PTL2K**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடை எழுதுக.

1. பெரியாரின் பெற்றோரைக் குறிப்பிடுக.

2. பெரியாரின் இளமைக்கால புரட்சிகரச் செயல்களைக் கூறுக.

3. வணிகத்தொழிலில் பெரியார் ஈடுபடக் காரணம் என்ன?

4. கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு காந்தியின் கவனத்தை ஈர்த்த பெண்மணிகள் யாவர்?

5. இந்திய தேசிய காங்கிரசில் பெரியார் எப்போது இணைந்து கொண்டார்?

6. சுயமரியாதை இயக்கம் – பெயர்க்காரணம் கூறுக.

7. வைக்கம் போராட்டத்தின் தோற்றுவாயினை விளம்புக.

8. சேரன்மாதேவி குருகுலத்தில் ஏற்பட்ட சிக்கல்களுக்குக் காரணமென்ன?

9. பெண் விடுதலைக்கு பெரியார் கூறிய வழிகள் யாவை?

10. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தினைச் சுட்டுக.

11. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரியார் ஏன் கலந்து கொண்டார்?

12. பெரியார் தொடங்கிய இதழ்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு, முறையே 250 சொற்களில் விடை எழுதுக.

13. ஈரோடு நகர்மன்றத் தலைவராகப் பெரியார் ஆற்றிய பணிகளை எடுத்துரைக்க.

14. பெரியாரின் காசிப் பயணம் குறித்து எழுதுக.

15. கதராடை விற்பனையில் பெரியார் ஈடுபடக் காரணமென்ன? விளக்கம் தருக.

16. காங்கிரசு பேராயக் கட்சியில் இருந்து பெரியார் வெளியேறக் காரணமான நிகழ்வினைத் தொகுத்துரைக்க.

17. வைக்கம் வீரர் – பெயர்க்காரணம் தருக.

18. பெரியாரின் பெண்ணுரிமைச் சிந்தனைகளை எடுத்தியம்புக.

19. தமிழ் மொழிகாப்புப் போராட்டத்தில் பெரியாரின் பங்களிப்பு குறித்து விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே
500 சொற்களில் விடை எழுதுக.

20. பெரியாரின் பிறப்பும் வாழ்வும் குறித்துக் கட்டுரைக்க.

21. சுயமரியாதை இயக்கத்தில் பெரியாரின் பங்களிப்பினை விளக்கியுரைக்க.

22. பெரியாரின் அறப் போராட்டங்களைச் சான்றுடன் விவரி.

23. பெண்விடுதலையும் பெரியாரும் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

24. பெரியாரின் இதழியல் பணிகளைத் தொகுத்துரைக்க.

———————